[1981 மே 12

Selling Of Firewood through Fair Price Shops in Madras City

* Q. No.987.. THIRU N· KITTAPPA.. Will the Hon. the MInister for Finance be pleased to State..

a) whether the Civil Supplies Corporation had arranged to sell firewood to card—holders in Madras City through fair price shop; and

b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—

(அ) ஆம்.

(ஆ) வெளிச்சந்தையில் விறகின் விலையைக் கட்டுப் படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சென்னை நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் நடத்திவரும் சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதத்திற்கு ஐந்து குண்டு விறகு கீழ்க்கண்ட விலைகளில் விற்கப் படுகின்றது :—

		விலை (25 கிலோ) குண்டு ஒன்றுக்கு.
சவுக்கு உருட்டுக்கட்டை	..	ரூ. 10.50
சவுக்கு உடைத்தது	..	ரூ. 11.00
காட்டுவிறகு உடைத்தது.	..	ரூ. 9.00

இதுவரை நுகர்பொருள் வாணியக் கழகம் நடத்தும் 32 சில்லறை விற்பனைக் கடைகளிலும் கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் 25 சில்லறை விற்பனைக் கடைகளிலும் விறகு வழங்கப்படுகின்றது.

பிற்பட்ட சமுதாய மக்களின் மேம்பாட்டுக்காக வாரியம் அமைக்கும் திட்டம்.

* வினா எண். 988— திரு. ரமணி திரு. வ.சத்தியமூர்த்தி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பிற்பட்ட சமுதாய மக்களின் முன்னேற்றத்துக்கு உதவும்பொருட்டு வாரியம் ஒன்றை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டத்தின் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) பிற்பட்ட சமுதாய மக்களின் முன்னேற்றத்துக்கு உதவும் பொருட்டு ரூபாய் பத்து கோடி ஒப்பிய மூலதனத்துடன் கடன் தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேத்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS